செய்தி வெளியீடு எண்: 382 நாள் :25.07.2016

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து 25.07.2016 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்து இன்று (25.07.2016) தலைமைச் செயலக பிரதானக் கட்டிடம் 2–ஆவது தளத்தில் அமைந்துள்ள திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூட்ட அரங்கில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்காக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மூலமாக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உன்னத திட்டங்களான மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல், கறவைப் பசு வழங்குதல் வெள்ளாடு/ செம்மறி ஆடுகள் வழங்குதல், திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய

மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் ஆகிய திட்டப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு நலத் திட்டப் பணிகளை முழுமையாகவும், விரைவாகவும் நிறைவேற்றிட அனைத்து அலுவலர்களும் விரைந்து செயல்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி–110ன் கீழ் வெளியிட்டப்பட்ட அறிவிப்புகள், மானியக் கோரிக்கை அறிவிப்புகள் உள்ளிட்ட அறிவிப்புகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து அறிவிப்புகள் மீது கூடுதல் கவனம் செலுத்தி, விரைந்து செயல்படுத்துவதை உறுதிபடுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முதன்மைச் செயலர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., அவர்கள், இயக்குநர் முனைவர் க. இராதாகிருஷ்ணன் அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் திரு. து. ரா. வேதநாயகம் அவர்கள், முனைவர் பீ. விஸ்வநாதன் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ப. செல்வராஜ் அவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**